# மதுரையில் தமுமுக, மமக ஆர்ப்பாட்டம்

## ● தென்மாவட்டம் முழுவதுமிருந்து திரண்டதால் போக்குவரத்து நெரிசல்

● **மதுரை**

மத்திய அரசைக் கண்டித்து மதுரையில் நேற்று தமுமுக, மமக சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தென்மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள், நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

மாநில அரசுகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநர் பதவியை ஒழிக்க வேண்டும், தேசிய புலனாய்வு அமைப்பை (என்ஐஏ) கலைக்க வேண்டும், ஜனநாயக விரோத உபா சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமுமுக, மமக சார்பில் மதுரையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்க நெல்லை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி உட்பட தென் மாவட்டங்களிலிருந்து தமுமுக, மமக நிர்வாகிகள், தொண்டர்கள் வாகனங்களில் தமுக்கம் பகுதிக்கு வந்தனர். ஆர்ப்பாட்டத்துக்கு திருச்சி மாவட்டம் மணப்பாறை தொகுதி மமக எம்எல்ஏ அப்துல் சமீது தலைமை வகித்தார். எம்பிகள் சு.வெங்கடேசன், மாணிக்கம் தாகூர், சுப்பராயன், மாநகர காங்கிரஸ் தலைவர் கார்த்திகேயன், மதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் பூமிநாதன் எம்எல்ஏ, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி கனியமுதன், மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றி திபேன், மமக மாநில பொருளாளர் உமர், தமுமுக மாநிலப் பொருளாளர் ஷபியுல்லாகான், மாநில துணைப் பொதுச் செயலர் முகமது கவுஸ், மாநில அமைப்பு செயலர்கள் பாதுசா, சரவணபாண்டியன், தமுமுக மாநில செயலாளர்கள் மைதீன் சேட்கான், சாதிக், சாதிக் அலி, முஸ்தபா, காதர் மைதீன் உள்ளிட்ட நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.



↑ **ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற எம்பிகள் சுப்பராயன், சு.வெங்கடேசன், மாணிக்கம் தாகூர் மற்றும் மமக, தமுமுக நிர்வாகிகள்.**

முன்னதாக வெளி மாவட்டங்களில் இருந்து வந்த தமுமுக, மமக நிர்வாகிகளின் வாகனங்கள் மாவட்ட, மாநகர எல்லைகளில் போலீஸார் தடுத்தனர். அவர்களை நகருக்குள் விடாமல் திருப்பி அனுப்பினர். இதைக் கண்டித்து மதுரை அருகே சமயநல்லூர் பகுதியில் மறியல் போராட்டம் நடந்தது. இதனால் மதுரை- திண்டுக்கல் சாலையில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

போலீஸார் மறியல் செய்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது வாக்குவாதம் ஏற்பட்டது.

மதுரை நகரில் போலீஸார் முன்கூட்டியே திட்டமிட்டு நடவடிக்கை எடுக்காததால் கோரிப்பாளையம், தமுக்கம், தல்லாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று பிற்பகல் 3 மணி முதல் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வாகன ஓட்டுநர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய வந்தவர்களின் வாகனங்களுக்கு இடையே சிக்கிக்கொண்டதால் அங்கிருந்து மீண்டுவர மிகவும் சிரமப்பட்டனர். தென் மாவட்டம் முழுவதுமிருந்து ஏராளமானோர் திரண்டதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.